**Word Of Christ**

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்

B. அர்ச்சுனன்

★ சபைச்செய்திகள்

(1) ஏப்ரல் 1,2 தேதிகளில் சகோதர,சகோதரிகளுக்கான கருத்தரங்கம் பெங்களூரில் சகோ. பி. ஆர். சாமி அவர்களால் நடத்தப்பட்டது. அநேகர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

(2) ஏப்ரல் 24-ம் தேதி சகோதரிகளுக்கான கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றது. சிலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

★ ஏப்ரல் மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. R. பெருமான் | புதுப்பாளையம் |
| 2. S. ரேய்ச்சல் அமுதமணி | மேல்விசாரம் |
| 3. N. டேனியல் தமிழ்வாணன் | „ |
| 4. S. எஸ்தர்ராணி | தூத்துக்குடி |
| 5. V. ஜான்பால் | கோவில்பட்டி |
| 6. P. முருகேசன் | K. அய்யாபட்டி |
| 8. S. மேரி கலைவாணி | வத்தலக்குண்டு |

★ ஏப்ரல் மாத இதழின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. கள்ளருடைய | யோபு 12:6 | 6. சவுல் |
| 2. அவன்பேரிலே | எசேக் 33:5 | 7. அதோனிபேசேக் |
| 3. பலவந்தம்பண்ணுகிறவர்கள் | மத் 11:12 | 8. ஆகான் |
| 4. யூதர்களை | I தெச 2:16 | 9. ஆக்கினைக் |
| 5. பவுல் | II தெச 2:15 | 10. வாசற்படியில் |

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 மே 1997 கனி 10


## உங்கள் பொக்கிஷம் எங்கே?

### Where is ycu" treasure ?

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்று மத் 6:21 ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார், இவ்வுலகத்தில் ஜீவிக்கிற நாம் நம்முடைய பொக்கிஷங்களை எங்கே சேர்த்துவைக்கின்றோம். பரலோகத்திலா? அல்லது பூமியிலா?

பரிசுத்த வேதாகமத்தில், பரலோகத்தில் சேர்த்து வைப்பதற்கான வழிமுறைகளை பலஇடங்களில் வாசிக்கின்றோம். ஆனால் இப்பூமியில்சேர்த்து வைப்பதற்கான வழிமுறைகள் சொல்லபடவில்லை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்வதைப்பாருங்கள. பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன். என் தாகத்தைத்தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னை சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னைவிசாரிக்க வந்தீர்கள் காவலிலிருந்தேன், என்னை பார்க்கவந்தீர்கள்;என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்திரமாக ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத்தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்பார் என்று மத் 26:35-40 முடியவாசிக்கின்றோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் இப்படி மற்றவர்களுக்கு நாம் உதவும்போது பரலோகத்திலே பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்கிறவர்களாயிருப்போம்.

புதிய ஏற்பாட்டில், ஆண்டவரின் உபதேசத்தில் நீயோ தர்மஞ்செய்யும் போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு ,உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது என்கிறார்'' மத்6:3 ஆம் பிரிய நண்பரே! வலதுகை செய்கிறதை இடதுகைஅறியாது செய்யும்போது பரலோகத்தில் பொக்கிஷங்களை

சேர்க்கிறவர்களாயிருப்போம். மற்றவர்கள் காணவேண்டுமென்று செய்தால் அதின் பலனை அடைந்துவிட்டோமென்று வேதம் நமக்குப் போதிக்கிறது. அநேகர் மோசேயின் பிரமாணத்தின்படி பத்தில் ஒன்று செலுத்தும் பழக்கத்தில் இன்றும் உள்ளனர். பத்தில் ஒன்று செலுத்துவதுகணக்குப் பார்த்து செலுத்துவதாகும் ஆனால் வலது கை செலுத்துவதை இடது கை அறியாது செலுத்துவதையே தேவன் விரும்புகிறார். ஆண்டவரும் தமது வலது பக்கத்தில் நிற்பவரைப் பார்த்துவாருங்கள் என்பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்பார். ஏன் வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அப்படிச் சொல்கிறார்? அவர்கள் பூமியில் இருந்த நாட்களில் கணக்கு பார்க்காமல் வலது கையில் வாரி வாரி கொடுக்கும் போது அந்த ஆசீர்வாதத்திற்குத் தகுதியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

கொடுப்பது என்பது நாம் அநுபவித்ததுபோக மீதத்தைக்கொடுப்பது என்பதல்ல. இதை குறித்து ஆண்டவர் குறிப்பிடும்போது லூக். 12:33 ல் உங்களுக்கு உள்ளவைகளை விற்று பிச்சை கொடுங்கள் பழமையாய் போகாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச்சம்பாதித்து வையுங்கள் அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை என்கிறார். நாம் ஒரு சில பொருட்களை சேர்த்து வைத்திருக்கிறோம். அவைகளை விற்றுதானதர்மம் செய்ய முன்வரவும் தயங்கக்கூடாது. பொருட்களுக்கு மேல் பொருள் சேர்ப்பதால் என்ன பிரயோஜனம்? அவைகளெல்லாம் ஒரு நாள் கெட்டு அழிந்துபோம். இப்படி அழிந்துபோக கூடிய பொருட்களைவிற்று பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்போம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பார்த்து ஒருவன் நல்ல போதகரே ,நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான்...கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் என்றார். அவனோவிருந்த துக்கமடைந்தான் என்று மத் 19:18-23ல் வாசிக்கிறோம். அநேகர் இப்படித்தான் பண ஆசையிலிருந்து விடுபடாமல் இப்படிப்பட்ட செய்தியைக் கேட்டவுடன் சபையை விட்டும்,கிறிஸ்துவை விட்டும் வெளியே போய் விடுகிறார்கள். நீங்களோ பண ஆசையில்லாதவர்களாய் நடந்து.உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணி குறையாத பொக்கிஷத்தைப் பரலோகத்தில் சேர்த்து வையுங்கள்.

நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப்போலிருக்கிறது யாக் 4:14. இப்படி நாளைய

[illegible]

[illegible]

## இயேசு கிறிஸ்துவின் 2-ம் வருகை

### The Second Coming of Jesus Christ

[illegible]

[illegible] (மத்.24:42) [illegible] (மத்.24:36)

அவர் வருகைக்கான வாக்குத்தத்தம் அடிக்கடி திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. கிறிஸ்து பரமேறிச்சென்ற பிறகு சீஷர்களைப்பார்த்து, தேவதூதர் கூறியது, ''கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.(அப்.1:11).

புதிய ஏற்பாடு முழுவதும் கிறிஸ்துவின் 2-ம் வருகையைக் குறித்து வாக்குதத்தம் கூறப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல அதற்கு ஆயத்தமுள்ளவர்களாய், விழித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தபட்டிருக்கிறது (1 தெச.5;1-11);(பேது.3;10 முதல்)

பவுல் கூறினார் ''ஒரு ஆவியினாலாவது வார்த்தையினாலாவது எங்களிடத்திலிருந்து வந்தாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும்.கலங்காமலும் இருங்கள் என்று (2 தெச.2;2),அவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியத்தையும் அதைக்குறித்த வாஞ்சையையும் இந்த நிருபங்களில் வெளிப்படுத்தப்பட்டு இருப்பதை நாம் காணலாம்.

ஆதிசபை தங்கள் ஜீவிய நாட்களில் இது சம்பவிக்கும் என்ற அர்த்தத்தில் அவர்கள் எதிர்பார்த்து கொண்டிருந்ததையும் புதிய ஏற்பாட்டிலுள்ள அநேக பகுதிகள் சுட்டி காட்டுகிறது. சில நவீன வேதகாம மாணவர்கள் தங்கள் வியாக்கியானத்தை கட்டாயமாக திணிக்க முயலுகின்றனர். யாக் 5:8-9 ஐயும் 1 பேது.4:7-ம் சுட்டிக்காட்டி வேதாகம ஆசிரியர்கள் தங்கள் ஜீவிய நாட்களிலே கர்த்தருடைய வருகை நிச்சயமாக சம்பவிக்கும் என்று கூறியதாக அர்த்தம் கொள்ளுகின்றனர் இந்த விரிவுரையாளர்கள் பேலும் கூறுவது. கர்த்தர் வருகை தாமதம் ஆகிவிட்டது.ஆகவே புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தவறாக கணக்குப்போட்டிருக்கிறார்கள் என்கின்றனர்.

இப்படி புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கூற்றின் மீது தங்கள் வியாக்கியானத்தை திணிக்க முயற்சிக்கின்றனர். புதிய ஏற்பாட்டு ஆசிரியர்''சமீபத்திலிருக்கிறது'' என்ற வார்த்தையை உபயோகபடுத்தினாலும். இயேசுவின் வருகையைக் குறித்து தமக்கு தெரிந்தாகவோ தாம் மரிப்பதற்கு முன் அவர் வருகை சம்பவிக்கும் என்றோ அவர்கள் கூறவில்லை. இந்த சம்பவத்தை தான் காணப்போவதாக பேதுருவும் எங்கும் குறிப்பிடவில்லை.(2பேது 3:14)

இயேசு உரைத்த வண்ணமாக, கிறிஸ்துவின் வருகை எப்பொழுது சம்பவிக்கும் என்று அறியாத நிலையில் அதற்கு ஆயத்தமுள்ளவர்களாக, விழித்துக்கொண்டு இருக்க வேண்டுமென்று தான் கூறி இருக்கிறார் நாமும் இன்று அப்படியே ஆயத்தப்பட்ட மக்களாக ஜீவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கூற்றை இயேசுவின் கருத்தோடு ஒப்பிட்டு அர்த்தம் பார்க்க வேண்டுமே தவிர 20-ம் நூற்றாண்டிலுள்ள நிலைமையை அனுசரித்து பார்க்க கூடாது.

விசுவாசத்தினால் உலகம் உண்டானது என்று நாம் எப்படி நம்ப வேண்டி இருக்கிறதோ (எபி.11:3). அப்படியே அதே வார்த்தையின் துணை கொண்டு உலகம் நெருப்பால் அழிக்கப்படும் என்பதை நம்பாமல் இருக்க முடியாது (2 பேது. 3:7-10) புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தவறு செய்யவில்லை, தவறாக எதையும் எடுத்துக்கொள்ளவுமில்லை. "நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் என்றார் பேதுரு (2பேது.1:16).

பிரியமுள்ள நண்பனே, கர்த்தர் நிச்சயமாக வருவார். அவர் எப்போது வருவார் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் நாம் விழிப்புடன், ஆயத்தமாக இருக்க எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் உன் நிலைமை என்ன? நீ ஆயத்தமாயிருக்கிறாயா? நீ அவருடைய பிள்ளையாக ஜீவிக்கிறாயா?

முதலாவது, நீ இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசி. அவரே உன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு,உயிர்த்தெழுந்தார் என்று நம்பு. இரண்டாவது,உன் பழைய பாவங்களை விட்டு மனந்திரும்பு. 3வது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று மனுஷர் முன்பாக வாயினால் அறிக்கையிடு நான்காவது, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள் அப்பொழுது நீ ரட்சிக்கப்பட்டு, தேவனுடைய பி ளையாக மாறலாம். அப்பொழுது கர்த்தர் உன்னை தம் சபையில் சேர்த்துகொள்வார். அதன் பின்னர், கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்படிந்து அவரை முழு மனதோடு பின்பற்றி, அவரை மகிமை படுத்தத் தக்க, உன்னத ஜீவியத்தை ஜீவித்தால், நீ உன்னை அவர் வருகைக்கு ஆயத்தம் செய்திருக்கிறாய் என்று அர்த்தம். கர்த்தர் வருகைக்கு முன்னதாக நீ மரித்து விட்டால், அவர் வருகையில் நீயும் உயிர்த்தெழுந்து நியாய தீர்ப்புக்குப் பின் கர்த்தரோடு கூட பரலோகத்திலே இருக்கும் பாக்கியத்தைப்பெறுவாய் அவர் வருகையிலே, உயிரோடு இருக்கும் நாமும்

அவரோடு எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் நித்தியத்தை அவரோடு கழிக்கும் பாக்கியத்தை பெறுவோம்.

## பெண்கள் பகுதி

### ஏற்ற துணை

### Helper

அன்பான சகோதரிகளே! தேவன் மனுஷியை உண்டாக்கினதின் நோக்கம், மனுஷி மனுஷனுக்கு ஏற்ற துணையாக இருக்க வேண்டுமென்பதற்கே. ஆதியிலே தேவன் மனிதனை உண்டாக்கிய பின் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் ஆதி 2:18. ஒரு நல்ல புத்தியுள்ள ஸ்திரீயாக, கர்த்தரால் புகழப்படுகிற ஸ்திரீயாகக் கருதப்படுவாள். எவ்வகையில் மனைவி தன் புருஷனுக்கு ஏற்றதுணையாக இருக்க முடியும் என்பதை வேதத்திலிருந்து காண்போம்.

மனுஷனின் மறுபாதியே மனுஷி என வேதம் கூறுகிறது. ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுத்த விலா எலும்பாக இருப்பதால் மனுஷனின் மறுபாதியே மனுஷி ஆகிறாள். அப்படியானால், ஒரு புத்தியுள்ளஸ்திரீ அல்லதுமனைவி புருஷனின் பாதிபகுதியை நிறைவு செய்கிறவளாய் இருக்க வேண்டும் அல்லவா! இன்றைய நாட்களில் புருஷனோ அல்லது மனைவியோ அதிகம் படித்தவராகவோ, வசதியுடையவராகவோ வேறு ஏதாவது காரியங்களில் ஒருவர் இன்னொருவரை விடஉயர்ந்தவராயிருப்பின் அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் எழும்பி அநேகக் குடும்பங்களில் பிளவு ஏற்படுகின்றது. ஏன்! விவாகரத்துகளும் கூட ஏற்படுகின்றன. தேவன் நிச்சயமாகவே விவாகரத்துகளையும்,பிரிவினைகளையும்வெறுக்கிறார். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார் மத் 19:4-6 இப்படியிருக்க மனைவியானவள் தான் எந்நிலையிலிருந்தாலும் புருஷனின் குறைவை நிறைவாக்குகிறவளாயிருக்கவேண்டும்.

ஒரு புத்தியுள்ள மனைவி கணவனின் தோழியாக அல்லது சிநேகிதியாகக் காணப்பட வேண்டியவளாயிருக்கிறாள். இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளக் கூடியவள் தான் ஒருநல்ல தோழியாக அல்லது உற்றசிநேகிதியாக இருக்கமுடியும். புருஷனின் இன்ப துன்பங்கள். வெற்றி.தோல்விகளில் பங்கெடுக்கக் கூடியவளே இந்த தோழி. அப் 18:2-3ல் ஒரு அருமையான தம்பதியார் நமக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கிறார்கள். பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடே கூட கூடார தொழில் செய்ததாக வேதம் கூறுகிறது.

தமது வழக்கத்தின்படி கூடாரத்தொழிலென்பது பெண்கள் செய்யும் தொழில் அல்ல. இருந்தபோதிலும் தன்கணவனின் பாரத்தை தாங்க கூடியவளாய் உத்தரவாதியாக செயல்படுகிறாள். இப்படி மனைவியானவள் தன் புருஷனோடுகூட அவர்கள் வேலைகளில் தோள் கொடுக்கிறவளாயிருக்கும் போது மட்டுமே கணவனுக்கு உற்ற தோழியாக அல்லது சிநேகிதியாக விளங்கமுடியும்.

மனைவியானவள் தன் புருஷனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவளாயிருக்க வேண்டுமென்று வேதம் போதிக்கிறது. அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் என்று 1 பேது 3:6லும் எபேசி 5:22 லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி கீழ்ப்படிந்திருக்க வேண்டிய மனைவியானவள் இன்றைய நாட்களில் புருஷன்மேல் அதிகாரம் செலுத்துகிறவளாய் இருந்து கொண்டு தேவ சித்தத்திற்கு எப்போதும் எதிர்த்து நிற்கிறார்கள். அன்றைய நாட்களிலும் கூட தேவன் ஏற்படுத்திய முதல் குடும்பத்தில் ஏவாள் தன் புருஷனையும் தன் அதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்தி, தேவன் புசிக்க வேண்டாம் என்று கூறிய கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான் என்று ஆதி 3:6 ல் வாசிக்கிறோம். இதனால் ஏற்பட்ட விளைவு தான் என்ன?. தேவன் அவர்களுக்கென்று அமைத்து கொடுத்திருந்த ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். ஏதேன் என்றால் சந்தோஷமான இடம் அல்லது பரலோகத்தைப் போன்ற இனிமையான இடம் என்று அர்த்தமாம் இப்பேர்பட்ட அருமையான இடத்தை விட்டு துரத்தப்பட்டார்கள். முதன் முதலாக கீழ்படியாமை என்ற பாவம் உலகத்தில்வந்தது. 1 தீமோ 2:12 ல் புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை என்று பவுல் கூறுகிறார். இப்படியிருக்க தேவனுக்குப் பயந்து நடக்க விரும்புகிற ஒரு மனைவியானவள் கண்டிப்பாக தேவசித்தத்தையும் நிறைவேற்ற வேண்டியது மிகவும் அவசியம் ஒருவேளை சில குடும்பங்களில் கணவன் தேவனை அறியாதவர்களாய், தேவசித்தத்திற்கு விரோதமான காரியங்களுக்குக் கீழ்படியும்படி கூறலாம் மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்படியுங்கள் என்று கொலோ 3:18 ல் வேதம் உணர்த்துகிறது. ஆம்! கர்த்தருக்குகேற்கும்படி கீழ்படிவதே தேவசித்தமாயிருக்கிறது. கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களில் கீழ்படியும்படி வேதத்தில் எங்கும் நமக்கு போதிக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனைவியானவள் கற்புள்ள நடக்கையுள்ளவளாய் இருக்க வேண்டும். அந்தப்படி, மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்படிந்திருங்கள் அப்பொழுது

அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்று 1 பேது 3:1ல் கூறப் பட்டுள்ளது.

அன்பான சகோதரிகளே, பக்தியுள்ள மனைவியாக இருக்க விரும்புகிற நாம் தேவசித்தம் செய்கிறவர்களாய் இப்படிப்பட்ட வேத ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து அவரவர் தன் தன் சொந்த புருஷருக்கு ஏற்றதுணையாக இருப்போமாக! கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

சகோதரி குளோரி அர்ச்சுனன்

6-ம் பக்கத் தொடர்ச்சி

என் பிரியமான நண்பனே, இவ்வுலகத்தில் நான் கஷ்டமும் கவலையும், கண்ணீரும் உள்ளதுபோல பரலோகத்தில் எந்த பிரச்சனையும் இருக்காது கிறிஸ்து கூறினார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"
(யோவா.14:1-3)

கிறிஸ்துவின் வருகையிலே நாமும் அவரோடு எடுத்துக் கொள்ளப்பட்டால் நாம் இந்த ஆனந்த பாக்கியத்தை அனுபவிக்க முடியும்.

அன்புள்ள சகோதரனே, நீ இன்றே கீழ்ப்படி. உன்னை அவர் வருகைக்கு ஆயத்தப்படுத்து. நீ ஆசீர்வதிக்கப்படுவாய்.

P. R. Swamy
Bangalore

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடைமட்டும் எழுதி இம்மாதம் 25-ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

[1] ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும் என்று சொல்லியது யார்?

[2] எந்தக்காட்டில் பட்டயம் பட்சித்த ஜனங்களைப் பார்க்கிலும், காடு பட்சித்த ஜனம் அதிகம்?

[3] சாலொமோனுக்கும் அவன் அரமனைக்கும் வேண்டிய உணவுப் பொருள்களைச் சேகரிக்க எத்தனை மணியக்காரர் இருந்தார்கள்?

[4] விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும் படியாக கிறிஸ்து எதின் முடிவாயிருக்கிறார்?

(5) சகோதரனிடத்திலே அன்பு கூறாதவன் எதிலே நிலை கொண்டிருக்கிறான்?

(6) அவர் எதை அனுப்பி அனுப்பி அவர்களை குணமாக்கி,அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்?

(7) ஒரு இராத்திரியிலே முளைத்தும்,ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான செடி எது?

[8] நாமும் சிறு பிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு எப்படிப்பட்ட வர்களாயிருந்தோம்?

[9] தான் போர்த்துக் கொண்டிருந்த புதுசால்வையை குறித்து, அதை பன்னிரெண்டு துண்டாகக் கிழித்துப் போட்டவன்யார்?

[10] கானான் தேசத்திலே எத்தனை ஜாதிகளை அழித்து, அவர்களுடைய தேசத்தை இஸ்ரவேலருக்குச் சுதந்திரமாகப் பங்கிட்டுக் கொடுத்தார்?

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd No. 84661-92
Registerd No. TN/DDL/19

If undelivered Please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No.5.
Batlagundu 624 202
S. India
(04543) 23278

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது

PRINTED MATTER

**TO**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கிறோம்
ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45
கிறிஸ்துவின் சபை
2-2- 102 D/5 ராஜன்நகர்
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு 624 202

Edited and Published by B. Arjunan M.A.,A.Bs., behalf of Church of Christ 2.2.102 D/5 Rajan nagar
BTL Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTERS Main Road Batlagundu 624 202